**முதன்மை மாவட்ட நீதிமன்றம், கரூர்.**

**MCOP. No.129/2023**

2026-ம் வருடம் பிப்ரவரி திங்கள் 23-ம் நாளன்று மனுதாரர் தரப்பு சாட்சியாக ம.சா.2வது நபரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54 விதியின்படி 95வது பிரிவின்படி ஏற்பட்டுள்ளபடி) திருமதி.இந்துமதி, உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்.** | **: அர்த்தநாரீஸ்வரன்** | **தொழில்** | : |
| **த/பெ.** | : | **வட்டம்** | : |
| **முகவரி** | : | **மதம்** | : |
| **ஜாதி** | : | **வயது** | : |

**முதல் விசாரணை**

நான் இம்மனுவில் மூன்றாம் தரப்பினர் ஆவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அது என்னுடைய தகவலின் பேரில் தயாரிக்கப்பட்டு, அதை நான் படித்து பார்த்து கையெழுத்திட்டேன். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தை ஏற்றுக்கொண்டு மனுதாரர் மனுவில் கோரியபடி உத்திரவாக வேண்டுகிறேன்.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

நீதிமன்றத்திலிருந்து சாட்சியம் அளிக்க அழைப்பாணை வரவில்லை. மனுதாரர் சாட்சியம் அளிக்க அழைத்ததால் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். விபத்தில் ராமசாமி என்பவர் இறந்துவிட்டார். அவர் சேமங்கி ஊரைச்சார்ந்தவர். ராமசாமி எனக்கு உறவுக்காரர் அல்ல பக்கத்து வீட்டுக்காரர். நானும் ராமசாமியும் பேசிக்கொண்டிருந்தோம் அப்போது விபத்து ஏற்பட்டது. விபத்து தார் ரோட்டில் ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல மண்ரோட்டில் நடைபெற்றது. ராமசாமியின் வீட்டிற்கு அருகில் விபத்து

ஏற்பட்டது. விபத்து நடந்த இடத்தில் சாலை சந்திப்புகள் இல்லை அது கிழமேல் ரோடு ஆகும். விபத்து நடந்த போது மாலை 6 மணி இருக்கும். நான் மேற்கு பார்த்து நின்று கொண்டிருந்தேன். ராமசாமி கிழக்கு பார்த்து நின்று கொண்டிருந்தார். ராமசாமியின் மீது மோதிய வாகனம் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வந்தது. ராமசாமியின் பின்புறமாக வாகனம் வந்து மோதியது. நான் நின்று கொண்டிருந்த திசைக்கு எதிர்திசையில் தான் மோதிய வாகனம் வந்தது. மண் சாலையில் இருசக்கர வாகனம் வேகமாக வர இயலாது என்று சொன்னால் சரியல்ல. வாகனம் அருகில் வரும்போது தான் வாகனத்தை நான் கவனித்தேன். வாகனம் வருவதை பார்த்து நான் ராமசாமியை எச்சரிப்பதற்குள் வாகனம் ராமசாமி மீது மோதிவிட்டது. வாகனம் ராமசாமி மீது மோதிய போது நான் வாகனம் மோதிய போது தள்ளி நின்று கொண்டேன். நீங்களும் ராமசாமியும் நேர் எதிர் திசையில் நிற்கவில்லை என்றும் அதனால் தான் உங்களுக்கு விபத்தில் காயம் ஏற்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் சொன்ன மாதிரி விபத்து ஏற்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. ராமசாமி விபத்தின் போது இறக்கவில்லை. ராமசாமி சிகிச்சை பெற்றும், வீட்டில் படுத்து படுக்கையாக இருந்து இறந்துவிட்டார். ராமசாமி இறப்பிற்கு பிறகு பிரேத பரிசோதனை செய்தார்களா என்றால் தெரியவில்லை. காவல்துறையினர் என்னை விபத்து குறித்து விசாரித்தார்கள். மனுதாரர் தரப்பிற்கு இழப்பீடு கிடைக்க வேண்டும் என்றும் ராமசாமி உங்கள் நண்பர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2026.02.23 18:22:35 +0000

மாவட்ட நீதிபதி,
கரூர்.